ஸ்ரீ திரிபுரஸுந்தரீ ஸமேத சந்திரமௌளீசுவராய நம:.

ஆர்ய தர்மம்.

महान्तं विश्वासं तव चरणपङ्केरुहयुगे
निधायान्यं नैवाश्रितमिह मया दैवतमुमे ।
तथापि त्वच्चेतो यदि मयि न जायेत सदयं
निरालंबो लंबोदरजननि कं यामि शरणम् ॥

आनन्दलहरी ॥

ஹே உமே! ஹே பார்வதிதேவி! தாமரை மலர்போல் விளங்கும் உன்னுடைய திருவடிகளில் மிகவும் அதிகமான விசுவாஸத்தைவைத்து, வேறுயுள்ள தைவங்கள் பலவிருப்பினும் அவைகள் என்னால், அற்பங்கூட ஆச்ரயிக்கப்படவில்லை. அவ்விதம் இதர தேவதைகளை விட்டுவிட்டு, உன் சரணங்களை நம்பி பக்திசெய்துகொண்டிருக்கும் என்னிடத்தில், உன் மனமானது கருணையுடன் கூடியதாக இல்லாவிட்டால், கஜாநநரின் தாயே! வேறு யாரை நான் சரணமாக அடைவேன்.

பரமேசுவரரின் பத்நியான உமாதேவியிடம் அதிக பக்தி கொண்ட ஒரு பக்தன், தன்னைக் கவனிக்கவேண்டிய சமயத்தில் கவனிக்காமல் பராதேவதையானவள், அநாதரவாய் இருந்துவிடுவாளோவெனச் சங்கைகொண்டு வேண்டுகிறதாவது,

ஹே ஈசுவரி! இதர தேவதைகளைவிட்டு உன்னையே சரணாகதியாயடைந்து, உன் சரணங்களையே எப்பொழுதும் தியானித்துக்கொண்டிருக்கும் என்னைக் கவனிக்கவேண்டியசமயத்தில் கவனிக்காமல் அநாதரவாயிருந்தால் எனக்கு வேறுகதி இல்லாதபடியால் மிகவும் கஷ்டப்படுவேன். இனிமேல் வேறு தெய்வங்களை ஆராதித்து அவைகளின் பிரஸாதத்தைப் பெறவும் ஸாத்தியம் இல்லை. ஆகையால் நீ என்னைக் கைவிடாமல் அவசியம் பாதுகாக்கவேண்டும் என்பதே. இதனால், ஏதாவது ஓர் தேவதையிடம் திருடமான பக்தி இருக்கவேண்டியது அவசியமென்று அறிவிக்கப்படுகின்றது.

ஆர்யதர்மம் உபபத்திராதிபர்.

வேதாந்த ஸாரம்.

(௫௧௭-ம் பக்கத்தொடர்ச்சி.)

सर्वेशत्वस्वतन्त्रत्वसर्वज्ञत्वादिभिर्गुणैः ।
सर्वोत्तमस्सत्यकामस्सत्यसङ्कल्प ईश्वरः ॥
तत्पदार्थस्त्वमर्थस्तु किंचिज्ज्ञो दुःखजीवनः ।
संसार्ययमुद्रातिको जीवः प्राकृतलक्षणः ॥
कथमेकत्वमनयोर्घटते विपरीतयोः ।
प्रत्यक्षेण विरोधोऽयमुभयोरुपलभ्यते ॥ ७२३.

ஸர்வேசுவரனுயிருக்கும் தன்மை, ஸ்வதந்திரனுயிருக்கும் தன்மை, ஸர்வக்ஞத்வம் முதலான குணங்களோடுகூடியவரும், எல்லாவற்றிற்கும் மேலானவராயும், ஸத்யகாமனும், ஸத்யசங்கற்பனுமாகிய ஈசுவரன் 'தத்' பதத்திற்குப் பொருளாகிறுன். 'த்வம்' பதத்திற்கு அர்த்தமான இந்த ஜீவனே அற்ப அறிவுடையவன், எப்பொழுதும் துக்கமுடையவன், ஸம்ஸாரபந்தத்தில் கட்டுப்பட்டவன், லோகாந்திரத்தை அடையக்கூடியவன், பிராகிருத லக்ஷணம் பொருந்தியவன். பிரத்தியக்ஷமாயறியக்கூடிய ஒருவருக்கொருவர் விரோதங்களான பல விபரீதகுணங்களையுடைய இவ்விருவர்களுக்கும் ஏகத்வம் எப்படிச் சொல்லமுடியும்? (गङ्गायां घोषः) கங்காப்பிரவாகத்தில் இடைத்தெருவு இருக்கின்றது" என்கிற இடத்தில் எப்படி ஜகல்லக்ஷணை (விட்ட லக்ஷணை) அங்கீகரிக்கப்படுகின்றதோ அவ்விதம் இங்குகூறவியலாது. ஏனென்றல், அந்த இடத்

தில் கங்காப்பிரவாஹத்தில் தெருவு இருக்கிறதென்றால் சம்பவிக்காதபடியால் கங்காபதத்தின் பொருளான பிரவாகத்தை விட்டு வேறான தீரபதத்தின் கருத்தை அங்கீகரிக்கிறோம். அவ்விதம் இங்கு தத் பதார்த்தத்தையோ அல்லது த்வம் பதார்த்தத்தையோ, பூராவையும் விட்டுவிட்டு வேறு பதத்தின் பொருளை ஸ்வீகரிக்கமுடியாது. (शोणो धावति) 'சிவப்புகுணம் ஓடுகின்றது' என்ற இடத்தில் வாக்கியார்த்தம் பொருந்தாமலிருப்பதால் எங்ஙனம் அஜகல் லக்ஷணை (விடாத லக்ஷணை) கூறப்படுகின்றதோ அவ்விதமும் இங்குகூற சாத்தியமில்லை. இந்தவிடத்தில் இன்னும் அதிக விஸ்தாரமாய் எழுதவேண்டியதிருப்பினும் அது பூராவும் வேறு சாஸ்திரத்தின் விசாரமாயிருப்பதாலும் சாஸ்திரங்களில் பயிற்சியில்லாதவர்களுக்கு அவ்விதம் விஸ்தரிப்பதில் அதிக திருப்தியுண்டாகாதெனக்கருதி அவசியமான பாகத்தை மட்டில் சுருக்கமாக நிரூபித்தோம். இதுவரை 'தத்', 'த்வம்' பதங்களுக்கு ஒருவிதமாயும் வாக்கியார்த்தம் சம்பவிக்கமாட்டாதென்று நிரூபித்தபடியால் அப்பதங்களுக்கு வாக்கியார்த்தம் உண்டா, இல்லையாவென நிகழும் சங்கைக்குச் சமாதானம் கூறுவாம்.

(ஸோயம் தேவதத்த:) என்ற இடத்தில் எப்படி அந்ததேச அந்தகால விசிஷ்டனான தேவதத்தனே இந்ததேச இந்தகாலத்துடன் கூடிய இந்த தேவதத்தன் என்று பொருள் கூறினால் விரோதிக்கின்றதெனக் கருதி 'ஸ' பதத்திற்கு வாச்யமான அந்த தேச கால சம்பந்தங்களையும் (இதம்) பதத்திற்கு வாச்யமான இந்த தேசகால சம்பந்தங்களையும் விலக்கிவிட்டு விரோதமில்லாத தேவதத்த பதத்தை மாத்திரம் எடுத்துக்கொண்டு இரண்டு ஸமயங்களிலும் பார்க்கப்பட்ட தேவதத்த வியக்தி ஒன்றுதான் வேறல்லவென்று பொருள் கொள்கிறோமோ அவ்விதமே (தத்வம் அஸி) என்கிற இந்த வாக்கியத்திலும் அங்கீகரிக்கவேண்டும். இங்கு 'தத்' பதத்திற்கு வாச்யம் பரோக்ஷத்வ ஸர்வக்ஞத்வாதி விசிஷ்ட சைதன்யம். த்வம் பதத்திற்கு அபரோக்ஷத்வ அற்பக்ஞத்வம் முதலானவைகளுடன்கூடிய சைதன்யம் பொருளாகும். இவ்விரண்டிடங்களிலுமுள்ள பரோக்ஷத்வாபரோக்ஷத்வம் முதலான விசேஷண ஸம்பந்தங்களை விலக்கிவிட்டு சைதன்யத்தை

மாத்திரம் எடுத்துக்கொண்டால் ஜீவனுக்கும் பரமாத்மாவுக்கும் அபேதம் சித்திக்கின்றது. 'தத்வமஸி' என்கிற வாக்கியத்தால் போதிக்கப்படும் இந்த அர்த்தத்தால் ஜீவனுக்கும் பிர்மத்திற்கும் ஐக்கியம் சித்திக்கின்றதென்று சான்றோர்கள் சாற்றுகின்றார்கள். இதற்குமேலுள்ள விசேஷங்களை உபதேசமூலமாய் அறிந்து கொள்ளவேணும். இம்மட்டோடு இந்தப் பிரகரணமும் முடிவு பெற்றது.

व्याख्या कृता द्राविडभाषया या वेदान्तसारस्य मयाधुना ताम् ।
गीतोक्तरीत्या परमात्मनेहं कृष्णाय नत्या सहचार्पयामि ॥

வேதாந்த ஸாரமெனப் பெயர்வாய்ந்த இந்த கிரந்தத்திற்குத் தற்காலம் தமிழ்ப்பாஷையில் ஸங்கிரகடீகை என்று சொல்லக் கூடிய யாதொரு மொழிபெயர்ப்பு என்னால் செய்யப்பட்டதோ, அதை **यत्करोषि यदश्नासि** என்று கீதா சாஸ்திரத்தில் கூறப்பட்ட பகவதபிப்பிராயத்திற்கிணங்க, பரமாத்ம ஸ்வரூபமாய் விளங்கும் ஸ்ரீ கிருஷ்ணபகவானையும் பொருட்டு, என்னுடைய அநேக வந்தனங்களையும் சேர்த்து ஸமர்ப்பணம் செய்கிறேன். சுபம்.

ஆர்யதர்மம் உப பத்திராதிபர்.

வீட்டைப்பார்க்கிலும் வேம்படி மேல்.

இம் முதுமொழியின் பொருளாவது,—நாம் வீட்டிலிருந்து என்றும் மீளாத்துன்பத்தை அனுபவிப்பதைவிட, ஏகாந்தமாய் ஒருவரது துன்பத்திற்கு மாளாகாமல் வேப்பமரத்தடியில் வசித்தலே சாலச்சிறந்தது, என்பதே.

உள்கருத்தாவது, நாமிவ்வுலகில் மோகத்தினால் பல துயரத்திற்காளாகாமல் பரமானந்தத்தை அடைய முயற்சிக்கவேண்டும். என்பதே.

பூஜ்யர்களே! இறைவன்படைத்த இவ்வுலகில் துயரங்களுக்கு ஸாதனமானவைகள் அநேகம்.

அவையாவன:—

முதலில் பாலபருவத்தை எடுத்துக்கொண்டால், ஜநித்தது முதல் பல ரோகங்களால் பீடிக்கப்பட்டு 7 வயது வரையிலும் கட்டுக்கடங்கி, தாய்மாரின் ஆதாவிலிருந்து வருகிறோம். அவ்வயதில் தாய்மார்களுக்கும், நமக்கும், மற்றவர்களுக்கும் பெரிதும் துன்பமே தவிர வேறன்று. 7 வயதிற்குமேல் பள்ளிக்குப் படிக்கச் செல்லுகிறோம். அங்கு உபாத்தியாயர்களின் மூலமாய் வாழ்நாளுக்கு இன்றியமையாத கல்வியைப் பெற்றாலும் பல கஷ்டங்களையுமடைகிறோம்.

தருணவயதில், ஸம்சாரம்வகிக்க வாகனமாகிறோம். அந்தோ! ஸம்சாரிகள் படுந்துயாமோ சொல்லத்தாமன்று. ஒருவன் ஏழையானால் குழந்தைகள் அநேகங்களைப் பெற்று,

धनक्षये दीव्यति जाठराग्निरापत्सु वैराणि समुल्लसन्ति ।

என்றவாறு மிகவும் பசியால் பீடிக்கப்பட்டு, தன்னுணவிற்குத் திண்டாடி, குழந்தைகளைப்பற்றிக் கவலைப்பட்டு சாகும் நிலையை அடைந்துவிடுகிறான். சிலர் ஊரைவிட்டும், கும்பலாய்வந்து ஆநந்தத்தைத்தரும் அருங்குழவிகளை இழந்து, தனது துன்பங்களையே சதா எண்ணி ஏங்கி, தன்னுலியன்றவாறு உதவிபுரியும் பிரியமான பிரியையையுமிழந்தும் சென்றுவிடுகிறார்கள்.

பணமுள்ளவனும் "நாம் இப்பணத்தினால்மட்டும் காலக்ஷேபம் செய்தால், சீக்கிரம் தனம் செலவாகிவிடும்" என்று எண்ணி மேன்மேலும் சேகரிக்க நினைத்து,

अर्थार्थी यानि दुःखानि मूढोऽयं सहते जनः ।

என்றபடி அதற்கேற்படும் பல துன்பங்களை அனுபவித்தும் உபரியுமனுபவிக்கத் தயாராயிருக்கிறான். அந்தோ! பரிதாபம். இவ்வுலகில் எவன்தான் மனவமைதி பெறுகிறான். இன்னும் ஏற்படும் துன்பங்களை உரைக்கிற் பெருகும்.

வயது காலத்தில், நம்மால் யாதொன்றும் செய்யமுடியாமல் தளர்ந்து, நமக்கு வேண்டியனவற்றைப் பேற விரும்பி, சிறுவர்

களை அழைத்து வேண்டினால் அவர்கள், "தாத்தா, ஆகட்டும், இதோ வந்துவிட்டேன்" என்று உரைத்துச் சென்றுவிட்டால், அவர்களின் வரவை எதிர்பார்க்கும் நம் கண்கள் பூத்துப்போய் விடும். சமயோசிதமாக ஆகாரங்கிடைக்காமல் திண்டாட நேரிடும். மிகவும் தளர்ந்துபோனாலோ, படுத்தபடுக்கையிலேயே இருந்து 'நாற்றமெடுத்தால் நாடமாட்டார்கள்' என்றபடி கவனிப்பாரின்றி பல இன்னல்களை அனுபவிக்க நேரிடும்."

நாமோ ஜன்மம் பெற்றுவிட்டோம். இந்த ஜன்மத்திலேயே துன்பங்களைப்போக்கும் வழிகள் எதுவென ஆராய்வோம்.

கல்வி, தானம், பஜனம், தர்மம் முதலியன துன்பத்தை நீக்க ஸாதனமாகும். அடிபட்டாவது படித்தால் நாமனுபவித்ததுபோக மீதியானதும், கற்றோர்கள் அனுபவித்து எழுதப்பெற்றதும், நமது அஞ்ஜானத்தால் அறியப்பெறாததும், மென்மேலும் உண்டாகக்கூடியதுமான கஷ்டங்களை உணர்ந்து, அவைகளுக்காளாகாவண்ணம் விலக வழியைக் கண்டுபிடிக்கமுடியும்.

தனத்தினால் தானஞ்செய்து இகலோகத்தில்,

कीर्तिरेव भवतां प्रियदारा दाननीरझरमौक्तिकहारा ।

என்றவாறு முக்கியமான புகழையடைந்து பல துன்பங்களுக்கு ஆஸ்பதமான இஜ்ஜன்மத்தை விலக்கி, சுகம்பெற வழியை அடையலாகும்.

தானம் முதலியதுகளினாலுண்டாகும் புண்ணியமே தர்மம் எனப்படும். இதுவே கிழவனுக்கு ஊன்றுகோல்போல் வழியை அடையச்செய்யும் ஸாதனம். மற்றும் பஜனாதிகளுமவ்விதமே. இவ்வித வழிகளை கடைபிடித்துப் புண்ணியங்களைப்பெற்று

अयशः प्राप्यते येन येनचापगतिर्भवेत् ।
स्वर्गाच्च भ्रश्यते येन तत्कर्म न समाचरेत् ॥

என்று இகழப்பட்ட, திரும்பவும் துன்பங்களுக்கிருப்பிடமான இஜ்ஜன்மத்தை கொடுக்கும் பாபகர்மாவை அனுஷ்டியாமல் எடு

த்த ஜன்மத்தைத் தொலைக்கவும், பரமானந்தமனுபவிக்கும் யோக்யதை பெறவும், இனிமேல் நச்வரமான உடம்பைப் பெருதிருக்கவும், துருவனைப்போல் என்றுமழியா தேஹத்தைப் பெறவும் அனுகூலம் செய்யுமாறு திரிலோகசரண்யனான அம்பாள் ஸமேதரான ஸ்ரீ சந்திரசூடாமணியை என்றும் போற்றுவோமாக.

T. K. ஸுப்ரமண்ய சர்மா.

கார்த்திகை மாரி (மழை) ஒளித்ததேன் ?

ஒவ்வொரு வருஷமும் கார்த்திகை மாதத்தில் தீபம் எங்கும் ஏற்றிவைப்பது உண்டு. அன்றே தீபாவளி என்ற நாமம் யதார்த்த நாமாவாக விளங்கும். ஏனெனிலோ தீபாவளி என்ருல் தீபங்களின் வரிசையெனப் பொருள்படும். ஆனால் தீபாவளி அன்றையதினம் ஸ்நானகாலத்துக்குவேண்டிய தீபம் தவிர விசேஷ தீபங்கள் ஏற்றிவைப்பதில்லை. அன்று தீபாவளி பேருக்குமாத்திரம்தான். பெயருக்கும் வழக்கத்துக்கும் பேதமிருப்பதின் காரணம் என்ன ?

கிருத்திகா தீபம் என் ?

ஆராய்ந்தால் உண்மை விளங்காது போகாது. நாம் யோசிக்காதது பிசகேதான். யோஜனை என்ற தத்வத்தையே மறந்துவிட்டோம். முந்தினோர்களின் ஆசாரங்களை அறியவேண்டி யோஜனை செலுத்தாத நாமா இனி வருங்கால பிரஜைகளுக்கு அநுகூலமாக சேமித்துவைக்க நூதனமான விஷயங்களைக் கடைப்பிடிப்பதில் யோஜனை செலுத்தப்போகிறோம். அனுதிகாலமாக புத்தியிலும் யோஜனையிலும் பிரஸித்திபெற்ற குலங்களைத் தலமுறையாகக் கொண்டு பரதகண்டத்தை அலங்கரித்து நிற்கும் ஹிந்து மக்கள்கள் இன்று (அதாவது கேவலம் பிரதேசத்துப் பிறந்தோர்கள் பலவித யோஜனைகளை பலவேறு துறைகளில் செலுத்தி, நவநவமான விஷயங்களை வெளிப்படுத்திவரும் இக்காலத்தில்) எந்தச் சக்தியுமற்று திக்கற்றவர்களாய் திகைத்து நிற்பது என்னே !

கிருத்திகாதீப நிர்ணயத்தில் காணப்படும் சில சுலோகங்களை இங்கே குறித்து அவைகளின் பொருளை ஆராய்வோம்.

रव्यस्तमनवेलायां दीपारोपः प्रशस्यते ।
मध्यमो मण्डलो लग्ने निंदितःस्यात्ततःपरम् ॥

சூரியாஸ்தமன வேளையில் தீபம் ஏற்றுதல் உத்தமம். சூரியமண்டலம் பாதி மறைகையில் மத்யமம், சூரியமண்டலம் மறைந்த பிறகு தீபமேற்றல் நிந்திக்கப்படுகிறது.

दीपकाश्च महादीपा नैकैकान्सर्वशो गृहे ।
देवालये नृपगृहे सभायां पुण्यभूमिषु ॥

சிறு தீபங்கள், பெருதீபங்கள் பிரத்தியேகமாக எல்லா வீடுகளிலும், தேவாலயங்களிலும், ராஜமாளிகையிலும், ஸபையிலும் புண்ணிய ஸ்தலங்களிலும் (தீபம் வைக்கவேண்டியது.)

सदा वर्षति पर्जन्यो रोगा नश्यति तत्र वै ।
सर्वे च सुखिनो मर्त्या भवन्ति निरुपद्रवाः ॥

மேகம் எப்பொழுதும் மழை பெய்விக்கிறது. ரோகங்கள் அப்பொழுது நசித்துவிடுகின்றன. எல்லா ஜனங்களும் உபத்ரவம் நீங்கி சுகவான்களாகிறார்கள்.

இவைகளின் சுருக்கம், சிறு தீபங்களும் பெரிய தீபங்களும் வரிசையாக எல்லா இடங்களிலும் வைக்கவேண்டும் என்றும் அந்தத் தீபங்களையும் சூர்யன் மறைவதற்கு முந்தியே வைக்க வேண்டும் என்றும், அவ்விதம் செய்வதால் மழை உண்டாகிறது, ரோகம் நசிக்கிறதென்றும் ஒரு குறிப்பை வெளிப்படுத்துகிறது.

தீபத்துக்கும் மழைக்கும் ஸம்பந்தம் என்ன என்பதைக் கவனிப்போம். இதற்குமுன் மழை உண்டாவதின் காரணத்தை உரைப்போம். சூரியனுடைய உஷ்ணத்தால் ஸமுத்திரத்திலுள்ள ஜலம் உஷ்ணம் அடைகிறது. ஜலம் உஷ்ணமடைந்ததும் (உலை நீர் ஆவியாக வெளிக்கிளம்புவதுபோல்) ஆவியாக மாறுகிறது. அது நீராவி. இந்த நீராவி லேசான பதார்த்தம். ஆனதால் உய

ரக்கிளம்புகிறது. கடல் விஸ்தாரமான பிரதேசமானதால் அந்த ஜலப்பரப்பின்மேல் உண்டாகும் நீராவிக் கூட்டமாக மேலே செல்லச்செல்ல ஒன்றுகூடுகிறது. இதற்கு காற்று உதவி. காற்று நீராவிக்கூட்டங்களை சேர்த்தும் பிரித்தும் பலதிசைகளுக்கு விரட்டி ஓட்டுகிறது. இந்த ஆவி நீர்க்கூட்டங்களுக்கு மேகங்களென்று பெயர். இந்த மேகங்களின் பேரில் குளிர்ச்சி வீசும்பொழுது (உஷ்ணத்தால் வாயுரூபமடைந்த)நீராவி முன்போல் ஜலமாகமாற ஆரம்பிக்கிறது. உலைக்கலத்தின் மேல்மூடியான சிப்பல் அல்லது இட்டலித்தட்டின் அடிப்புறத்தில் தோன்றும் ஆவிப்படலங்களையும், சிறு நீர்த்துளிகளையும் எல்லோரும் பார்த்திருக்கிறோம். அதே ஜலத்துளிகள் தட்டிலிருந்து பூமியில் விழுவதையும் பார்க்கிறோம். இத்தன்மைபோல், நீராவி ஜலமாக மாறும்பொழுது மேகம் கறுத்துக்காண்பிக்கிறது. உடனே மழைத்துளிகள் பூமியில் விழுகின்றன. மேகங்களின்பேரில் அதிகக் குளிர் வீசும்பொழுது ஆவி ஜலத்திவலைகளாக மாறின உடனேயே அந்தஜலம் பனியாக உறைந்துவிடுகிறது. (பூமண்டலத்தில் குளிர்ந்த இடங்களிலும், மலை உச்சிகளிலும், சீதள தேசங்களிலுள்ள கடல்களிலும் ஜலம் பனியாக உறைகிறது.) நெய் உஷ்ணத்தால் உருகுவதையும், உருகினநெய் குளிர்ந்ததும் உறைவதையும் பார்க்கிறோம். பனித்துளிகள் பூமியில் விழுகின்றன. பின் பனிக்காலத்துக் காலையில் புல்லின்மேல் பனித்திவலைகளைப் பார்க்கிறோம்.

ஆவணியும், புரட்டாசியும்—மழைப்பருவம்.

ஐப்பசியும், கார்த்திகையும்—குளிர்ப்பருவம்.

மார்கழியும், தையும்—முன் பனிப்பருவம்.

மழைப் பருவத்தில் மேகங்கள் பொழிவித்து, குளிர்ப் பருவத்தில் பனியாகமாற ஆரம்பித்து, பனிப் பருவத்தில் மூடுபனியாக பூமியில் பெய்கிறது.

ஐப்பசி, கார்த்திகை மாதங்கள் மழைகாலத்துக்கும் முன் பனிக் காலத்துக்கும் இடையில் வருபவை. அவைகளில் ஐப்பசி அடைமழை, என்று சொல்வதற்கிணங்க—மழைகாலத்தை ஒட்டியுள்ளது. கார்த்திகை-மீ பிந்திய மீ த்தைச்சார்ந்து முன்

பனி ஸம்பந்தமாக உள்ளது. பொதுவாக இவ்விரு மாதங்களிலும் ஆகாசத்திலுள்ள மேகக்கூட்டங்கள் (வேண்டிய குளிர்ச்சியைப் பெற்று ஜலமாகமாறி மழைத்திவலைகளாக பூமியில் விழுந்துகொண்டிருந்தவைகள்) அதிகக் குளிர்ச்சிப்பெறுவதால், மேகங்களிலுள்ள நீர்த்துளிகள் பனியாகமாறி பூமியில் உதிர்கிறது. இது மூடுபனி அதிகம் ஏற்படும் குளிரை அடக்கிவிட்டால் மேகநீர் பனியாக மாருதல்லவா? இரவில் சூரியனில்லாததால் குளிர் மிகுதி. பகலில் சூரியனுல் வெப்பமடைந்திருக்கும் ஆகாயத்தை இரவிலும் வெப்பத்தால் தாக்கினுல் ஆகாயம் அதிகக் குளிர் இல்லாமல் நிற்கும். ஆதலால் மேகத்திலுள்ள ஜலம் பனியாக மாற முடியாது. அப்பொழுது ஜலத்திவலைகள் மழையாகப் பூமியில் பெய்யும். இதை உத்தேசித்தே சூரியன்மறைவதற்கு முன்னேயே தீபங்கள் ஏற்றவேண்டும். ஆகாசபாகம் முழுவதும் ஒரே காலத்தில் உஷ்ணம் அடைய வேண்டியிருப்பதை உத்தேசித்து, தீபாவளி, கார்த்திகை என்ற ஒரு விசேஷக் குறிப்பிட்டதினத்தில் எல்லா இடங்களிலும் ஒரே ஸமயத்தில் தீபம் வைக்கவேண்டும். இந்த ஏற்பாட்டால் கார்த்திகை மாதத்தில் 2 தினங்கள் சேர்ந்தாற்போல் அதிகக் குளிரில்லாமல் இருப்பதால் பனியில்லாமல் மழை நன்ருய்ப் பொழிகிறது. குளிர் மழைகாலத்தில் புதிதாய் தோன்றும் கிருமிகள் தீபஉஷ்ணத்தில் நசித்துவிடுகின்றன. வியாதிகள் ஒழிந்துவிடுகின்றன. ஜனங்கள் ஸுகிகள் ஆகிருர்கள்.

(தொடரும்)

ஸாரம்.

மதாசார்யர்களும் அவர்கள் அருளியுள்ள பாஷ்யங்களும்.

இப்பாரதகண்டத்தில் அநேக மதங்கள் தொன்றுதொட்டு நிலவிவருகின்றனவாயினும் அவைகளில் பிரஸித்தமானவை மூன்றே என்பர் அறிஞர். 1 அத்வைதம், 2 விசிஷ்டாத்வைதம், 3 துவைதம். இவைகள் முறையே ஸ்ரீ சங்கரபகவத்பாதர், ஸ்ரீ பகவத்ராமாநுஜர், ஸ்ரீமதானந்ததீர்த்த பகவத்பாதர் (ஸ்ரீமத்வாசாரியார்) இவர்களினுல் ஸ்தாபிக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு

வரும் தத்தம் மதத்தின் ஸித்தாந்தங்களை நன்கு விளக்க பாஷ்யம் என்ற அரிய நூலை இயற்றியருளியுள்ளார். இப்பாஷ்யங்கள், ஸ்ரீ வியாஸபகவான் அருளால் வெளிப்படுத்தப்பட்ட பிரஹ்ம ஸூத்ரங்களின் வியாக்யான ரூபங்களேயாகும். பிரஹ்மவிசாரமே அவைகளுக்கு விஷயம். அந்தப் பிரஹ்மஸூத்திரங்கள் நான்கு அத்தியாயங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு அத்தியாயத்திலும் பாதங்கள் என்ற உட்பிரிவுகள் நான்குள. இப்பிரஹ்மஸூத்ரங்கள் சங்கரபாஷ்யானுசாரம் ஐந்நூற்று ஐம்பத்து ஐந்து. ராமாநுஜபாஷ்யப்ரகாரம் ஐந்நூற்று நாற்பத்தைந்து. மத்வ பாஷ்யப்ரகாரம் ஐந்நூற்றறுபத்துநான்கு. இவ்வாறு ஸூத்ரங்களின் ஸங்கியை மாறுபடுதற்குக் காரணம், பொருளொற்றுமை கருதி ஒருவரால் ஒரே ஸூத்திரமாகக் கணிக்கப்பட்டது இன்னொருவரால் இரண்டாகக் கொள்ளப்பட்டதே என்பது ஸ்பஷ்டமாய்த் தெரியவரும்.

இந்த ஸூத்ரங்கள் தோன்றிய காலத்தை நம்மால் நிச்சயமாக நிர்ணயிக்கமுடியவில்லை. ஆனால் ஸ்ரீமத் பகவத்கீதை பதின்மூன்றும் அத்தியாயம் நான்காம் சுலோகத்தில்,

ऋषिभिर्बहुधा गीतं छन्दोभिर्विविधैः पृथक् ।
ब्रह्मसूत्रपदैश्चैव हेतुमद्भिर्विनिश्चितैः ॥

பிரஹ்மஸூத்ரமென்ற வார்த்தையைக் குறித்திருப்பதால் கீதோபதேசம் செய்யப்பட்ட காலமாகிய பாரதயுத்தத்திற்கு முன்னமேயே இவைகள் இயற்றப்பட்டிருக்கவேண்டும். இச்சூத்திரங்களுக்கு நமது மதாசாரியர்களின் பாஷ்யங்கள் அவசியம் இருக்க வேண்டியனவே.

अल्पाक्षरमसन्दिग्धं सारवद्विश्वतोमुखम् ।
अस्तोभमनवद्यं च सूत्रं सूत्रविदो विदुः ॥

என்ற ஸ்காந்தபுராண வசனத்தின்படி ஸூத்ரங்கள் சில்வகை எழுத்துக்களால் பல்வகைப் பொருளை விளக்க எழுந்தவை; ஆதலால் அவைகளின் உண்மையான அர்த்தத்தை நாமெல்லாரும் உணரப் பாஷ்யங்கள் அவசியமே.

வரிசைக்கிரமத்தில், சங்கரபாஷ்யம் முதலிலும், ராமாநுஜ பாஷ்யம் அதற்குப்பிறகும், அதற்குப் பிறகு மத்வபாஷ்யமும் என்று அனைவரும் அங்கீகரிக்கிறார்கள். ஸ்தூலமாகச் சொல்லின், ஜீவனுக்கும் பிரம்மத்துக்கும் பேதம் கிடையாது. இவ்வுலகம் பிராந்தி கல்பிதம். பிராந்தி நஷ்டமானவுடன் ஜகத்தே தோன்றுவதில்லை. அக்ஞானதசையில், உலகம் யதார்த்தம்தான். ஜீவனும் ஈசுவரனும் வேறு என்று நினைத்து விஹிதகர்மானுஷ்டானம் முதலியவைகளைச் செய்யவேண்டும் என்பது சங்கரபாஷ்யத்தின் (அத்வைத மதத்தின்) கொள்கையாகும்.

ஈசுவரன், ஜீவன், ஜடம் என்ற மூன்றும் அநாதியானவை. சேதனு சேதனத்மகமான இப்பிரபஞ்சம் ஈசுவரனின் சரீரம். சரீரத்துக்கும் சரீரிக்கும் (சரீரமுடையோன்) பேதம் உண்டு. ஈசுவரப்ரஸாதார்த்தம் ஸத்கர்மானுஷ்டானம் அவசியம் என்பது ராமானுஜபாஷ்யத்தின் அபிப்ராயம்.

श्रीमन्मध्वमते हरिः परतरः सत्यं जगत्तत्वता
भेदो जीवगणाः हरेरनुचराः नीचोच्चभावं गताः।
मुक्तिर्नैजसुखानुभूतिरमला भक्तिश्च तत्साधनं
ह्यक्षादित्रितयं प्रमाणमखिलाम्नायैकवेद्यो हरिः॥

மத்வமதத்தில், விஷ்ணுவே ஸர்வோத்தமர். ஜகத் உண்மையானது. ஜீவனுக்கும் பிரஹ்மத்துக்கும் பேதம் உண்டு. உண்மையானது. ஜீவ ஸமூஹங்கள் ஸ்ரீ ஹரியின் தாஸர்கள். அவர்களிடையே பரஸ்பரம் தாரதம்யம் உண்டு. தன் ஸ்வரூப ஸுகத்தையனுபவிப்பதே முக்தி. அதைப் பெறுவதற்கு நிர்மலமான பக்திதான் ஸாதனம். பிரத்யக்ஷம், அனுமானம், ஆகமம் என்ற மூன்றே பிரமாணங்கள். ஸ்ரீ பகவானை வேதங்களினல் மாத்திரம் அறியலாம் என்பது மத்வபாஷ்யத்தின் ஸாராம்சமாகும்.

இவ்வண்ணம் பரஸ்பரம் விரோதமான கொள்கையுடைய பாஷ்யங்களுக்கு ஒரே மூலமான ஸ்ரீ வியாஸரின் பிரஹ்ம ஸூத்ரங்கள் எவ்விதம் இடங்கொடுத்தனவென்று சங்கை ஏற்படலாம்.

அதற்குப் பல காரணங்கள் உள. அவைகளில் சிலவற்றை நாம் இங்குக்கூறுவோம்.

1. **परोक्षप्रिया हि देवाः प्रत्यक्षद्विषः** தேவதைகள் ஸ்பஷ்டோக்தியில் வெறுப்பும் கூடமாகப் பேசுவதில் விருப்பமும் உடையவர்கள். § ஸ்ரீமத் பாகவதம் 4-ம் ஸ்கந்தம், 28-ம் அத்தியாயம், 65-ம் சுலோகம்.

बर्हिष्मन्नेतदध्यात्मं पारोक्ष्येण प्रदर्शितम् ।
यत्परोक्षप्रियो देवः भगवान्विश्वभावनः ॥

நாரதர், சிறந்த தத்வங்களைப் பிராசீன பர்ஹி அரசனுக்குப் புரஞ்ஜனோபாக்யான ரூபமாக உபதேசித்த பிறகு கூறுகிறார். "அரசனே! இவ்வுபாக்யானம் ஜீவன் விஷயமானது. புரஞ்ஜன சரித்திரமென்னும் வியாஜத்தால் காட்டப்பட்டது. ஏனென்றால் ஸர்வக்ஞரான பகவானனவர் கூடமாகப் பேசுவதிலேயே விருப்பமுடையவர்" ஆகையால் அவர்களின் நிஜ அபிப்பிராயம் ஸ்பஷ்டமாக நமக்குத் தெரிய இடமில்லை.

2. பிரஹ்மஸூத்ரங்களில் இவை பூர்வபக்ஷ சூத்திரங்கள் இவை ஸித்தாந்த ஸூத்ரங்கள் என்ற பிரிவு இல்லை. ஆயினும் இம்மதாசாரியர்களில் சங்கராமானுஜர்கள், சில பூர்வபக்ஷ ஸூத்ரமென்றும், மற்றும் சில ஸித்தாந்த ஸூத்ரமென்றும் கூறுகிறார்கள். மத்வரோ எல்லா ஸூத்ரங்களும் ஸித்தாந்த ஸூத்ரங்களே என்று கருதினர். முன்னிருவர்கள் ஷெ விஷயத்தில் அபிப்ராய பேதமற்றவராயினும் சங்கரர் பூர்வபக்ஷ ஸூத்ரமென்று சொல்கிற 2—3—22 **नाणुरतच्छ्रुतेरिति चेन्नेतराधिकरणात्** என்ற ஸூத்ரத்தை ராமானுஜர் ஸித்தாந்த ஸூத்ரமென்று கூறுகிறார்.

3. ஸூத்திரங்கள், முற்கூறியபடி சில எழுத்துக்களால் செய்யப்பட்டவையாகையால், பிருஹத் ஸம்ஹிதையில்

---

§ வேப்பம்பழம் ஏன் கசப்பென்றால் அதன் பீஜம் கசப்பு என்று விடை. பீஜம் ஏன் கசப்பு? என்று மூலகாரணத்தில் பிரச்னம் செய்யலாகாது. அதுபோல் இங்கும் ஏன் தேவதைகளுக்கு ஸ்பஷ்டோக்தியில் வெறுப்பு? என்று கேள்வி கேட்கலாகாது.

यत्रानवसरोऽन्यत्र पदं तत्र प्रतिष्ठितम् ।
वाक्यं वेति सतां नीतिः सावकाशे न तद्भवेत् ॥

எப்படி ஒரு வாக்யத்தில் ஒரு வார்த்தையில்லாவிடில் அர்த்தம் ஸம்பூர்ணமாகிறதில்லே என்று அவ்வார்த்தையை சேர்த்துக்கொள்ளுகிறோமோ அதுபோலவே ஓர் மகாவாக்யத்தில் எந்த அவாந்தா வாக்யமின்றி அர்த்தம் முடிவு பெறுகிறதில்லேயோ அவ்வாக்யத்தைச் சேர்த்துக்கொள்ளவேண்டும். அவ்வார்த்தையோ அல்லது வாக்யமோ இல்லாவிடினும் அர்த்தம் சரிவர இருந்தால் அவ்விதம் சேர்க்கவேண்டியதில்லே. இதுதான் ஸஜ்ஜனர்களின் நீதி" என்று கூறப்பட்டபடி சில பதங்களை அத்யாஹாரம் செய்யவேண்டியிருக்கிறது. பாஷ்யகாரர்கள் தத்தம் இச்சானுஸாரமாகப் பதங்களைச் சேர்த்துக்கொண்டதால் ஸித்தாந்த பேதங்கள் ஏற்பட்டன. உதாரணமாக 2–3–13ல் ॐ न वियदश्रुतेः ॐ என்ற ஸூத்திரத்தில் उत्पद्यते 'உண்டாகிறது' என்ற பதத்தைச் சங்கர ராமானுஜர்களும் अनुत्पत्तिमत् 'உண்டாகிறதல்ல' என்ற பதத்தை மத்வரும் சேர்த்துக் கொண்டிருக்கிறார்கள். மேலும் ஒருவர் சேர்த்துக் கொள்ளாமல் இருக்கும்போது இன்னொருவர் சேர்த்துக் கொண்டிருக்கிறார். உதாரணமாக 4–3–7ல் ॐ कार्यं बादरिरस्य गत्युपपत्तेः ॐ என்ற ஸூத்திரத்தில் சங்கர மத்வர்கள் ஒரு பதத்தையும் அத்யாஹாரம் செய்யவில்லை. ராமானுஜர் कार्यं ये उपासते तान् என்று उपासते என்ற பதத்தைச சேர்த்திருக்கிறார்.

இதர பாஷைகளைப் போலவே கீர்வாண பாஷையிலும் (ஸம்ஸ்கிருதத்திலும்) ஒரு பதத்துக்கு அநேக அர்த்தங்கள் உண்டு. பாஷ்யக்காரர்கள் தங்களுக்குத் தோன்றின ஏதோ ஒரு அர்த்தத்தைக் கொண்டனர். 2–3–15

ॐ अन्तराविज्ञानमनसीक्रमेण तल्लिङ्गादिति चेन्नाविशेषात् ॐ ।

என்ற விடத்தில் மத்வர் अन्तरा சப்தத்திற்கு विना என்றஅர்த்தத்தையும் சங்கர ராமானுஜர்கள் मध्ये என்ற அர்த்தத்தையும் செய்திருக்கின்றனர்.

5. ஒரு வாக்யத்தில் பதவிபாகம் (பதங்களைப் பிரித்தல்) மாறினால் அர்த்தத்திலும் வித்யாஸமேற்படுவது இயற்கையே

யாகும். 2—3—26 ஓம் गुणाद्वा लोकवत् ஓம் என்ற ஸூத்தி ரத்தில் लोकवत् என்று சங்கரர் பதவிபாகம்செய்திருக்க, மத்வர் आलोकवत् என்று செய்துள்ளார். இவ்விதமே உபநிஷத்துகளி லும் வெவ்வேருகப் பதவிபாகம் செய்யப்பட்டிருக்கிறது. சாந் தோக்ய உபநிஷத்தில் स आत्मा तत्त्वमसि என்றவிடத்தில் तत् + त्वं + असि (तत्त्वमसि) என்று சங்கரரின் பதவிபாகம். अतत् + त्वं + असि (अतत्त्वमसि) என்று மத்வரின் பதவிபாகம்.

6. இனி நம்மிற் பெரும்பான்மையோர் தத்தம் மதத்தின் கொள்கைகளின்னவையென்று தெளிவாக அறிந்து கொள்ளமுடி யாத நிலையிலிருக்கிருர்களென்று தோன்றுகிறது. ஒருவாறுஅறிந் திருப்பினும் இதர மதங்களின் ரகஸ்யங்களை அறிய அவர்களுக்கு அவகாசம் சிறிதும் ஏற்பட்டிராது என்பது திண்ணம். ஆனல் ஆஸ்திகபுத்தியுள்ள எல்லோரும்தம்மதத்தின் கொள்கைகளெவை இதர மதங்களின் கொள்கைகள் எவை? என்று அறிவதற்கு அதிக ஆவலுள்ளவராயிருப்பர் என்று நிச்சயமாகக்கூறலாம். ஆகையால் மேற்கூறிய மூன்று மதங்களின் கொள்கைகளையும் வினவிடை வடிவத்தில் யாம் எம் சிற்றறிவுக்கெட்டியபடி இங்கே முறையே வரைவோம்.

.M ராம ராவ்.
ஸ்ரீ மாத்வஸபையின் காரியதரிசி,
கும்பகோணம்.

ஒரு சங்கை.

"கேதுகிரஸ்தம்"

நாளது குரோதன-ஸு சென்ற ஆடி-மீ 20உ (4–8–25ல்) சம்பவித்த கிரஸ்தோதய சந்திரக்கிரஹண தினத்தன்று ஆனை தாண்டவபுரத்திற்கு அடுத்த மூழையூர் கிராமத்திலிருக்கும் சாஸ் திரியார் ஒருவர் இந்தக் கிரகணம் கேதுகிரஸ்தம் எனறும் அத ற்கு சாஸ்திரத்தில் எவ்விதமான தோஷமும் கிடையாதென்றும் சொல்லியிருப்பதால் அதை நாம் அனுஷ்டிக்கவேண்டியதில்லை என்று உபதேசித்ததை ஷை யூரில் சிலர்கேட்டு மேற்படி கிரகண தினத்தன்று உபாகர்மா, சிராத்தம் இவைகளை நடத்தியும் கிர கணத்தையும் அனுஷ்டிக்காமலிருக்கிருர்கள். இது தவிர ஷை யூர் சாஸ்திரியள் கேதுகிரஸ்தம் அனுஷ்டிக்கவேண்டியதில்லை என்று சாஸ்திரங்களிலிருப்பதை சுலோகரூபத்துடன் எழுதி அச்சுப் போடுவதாகவும் தெரியவருகிறது. ஆகையால் இனிவரும் கேது

கிரஸ்தகிரகணங்களை அனுஷ்டிக்காமலிருந்துவிடலாமா? சாஸ்திரத்தில் கேதுகிரஸ்தகிரகணங்களுக்குத் தோஷம் உண்டா? இல்லையா? என்பதைப் பண்டிதர்கள் விரிவாய் ஆர்யதர்மம் வாயிலாகத்தெரியப்படுத்தும்படி கேட்டுக் கொள்கிறேன்.

M. S. சுந்தரேசய்யர்.
செம்மங்குடி.

ஸ்ரீ ராமாயண பட்டாபிஷேக மஹோத்ஸவம்.

நாகை வெளிப்பாளையம் சிவன்கோவில் வடக்கு மடவிளாகத்தில் வஸிக்கும் வக்கீல் குமாஸ்தா முத்துசாமி அய்யரவர்கள் கிருகத்தில் சென்ற 1924ஸு அக்டோபர் மாதத்தில் காப்பணமங்கலம் பிர்மஸ்ரீ சரவணபவ சாஸ்திரியளவர்கள் ஸ்ரீ வால்மீகி ராமாயணத்தை உபக்கிரமம் செய்து, ஒவ்வொரு தினமும் இரவு 7 மணி முதல் 11 மணி வரையில் சகல ஜனங்களுக்கும் மனதில் பக்தி ஏற்படும்படி வெகு அழகாய் நடத்திவந்ததை அங்குள்ள யாவரும் நன்கு அறிந்திருக்கலாம். ஷ ராமாயண கதாகாலக்ஷேபம் ஸ்ரீ ராமச்சந்திரனுடைய பூர்ணானுக்கிரகத்தாலும் ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதிகளான சங்காசார்ய ஸ்வாமிகளவர்களுடைய பிரஸாதத்தாலும் நிர்விக்கனமாய் நடைபெற்று குரோதனஸு ஆவணிமீ 1உயன்று அதன் பூர்த்தியான பட்டாபிஷேக மஹோத்ஸவமும் நடத்தப்பட்டது. அன்று சிமிழி பிர்மஸ்ரீ வெங்கட்டராம சாஸ்திரியளும் கூடவிருந்து வேதபாராயணம் ஸ்ரீ பகவதர்ச்சனம் முதலான காரியங்களை விதிப்படி நடத்திவைத்தார்கள். பிறகு பகலில் விசேஷமான பிராமண ஸந்தர்ப்பணைகளும், ராத்திரி 7 மணி முதல் 11 மணி வரையில் ஸ்ரீ பகவத் கதாப்பிரஸங்கமும் நடைபெற்றது. அப்பால் வெளிப்பாளையம் வேம்புவய்யர், சிவன்கோவில் சிவாசாரியர் மற்றும் அந்நகர் வாஸிகளான மஹா ஜனங்களனைவரும் மிகுந்த பக்திசிரத்தையுடன் சிறந்த விமானத்தில் நன்ருய் அலங்கரிக்கப்பட்ட ஸ்ரீ ராம பட்டாபிஷேகபடத்தைவைதது தர்சிக்கும் ஜனங்களுக்கு அதிக ஆனந்தத்தையுண்டுபண்ணி மேளவாத்தியங்களுடனும், வேதபாராயணங்களுடனும் எல்லாரும் ஏகமனதாய் பட்டாபிஷேக உத்ஸவத்தைப் பூர்த்திசெய்துவைத்தார்கள். நம்நாடெங்கும் இம்மாதிரி ஸத்கதா காலக்ஷேபங்கள் எப்பொழுதும் நடைபெறவேண்டி ஸ்ரீ ஸீதா ஸமேதரான ஸ்ரீராகவரும் ஜகத்குரு ஸ்ரீசங்காசார்ய ஸ்வாமிகளும் அனுக்கிரகிக்கவேண்டுமாய்ப் பிரார்த்திக்கிறேன்.

ஸமுதாயதாஸன்,

ஸ்ரீமடம், வி. எஸ். ராமச்சந்திரன்.